# முத்துராமலிங்கத் தேவர் அரங்கம்: முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

**முத்துராமலிங்கத் தேவர் அவர்களை சிறப்பிக்கும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட பணிகள்**

முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு, மதுரை மாநகரில் கண்டோர் பிரமிக்கும் வகையில் 12 அடி உயர பீடத்தில் 13 அடி உயரமுள்ள பிரம் மாண்டமான வெண்கலச் சிலையைத் திறந்துவைத்து அவரைப் போற்றினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்; தேவர் திருமகனார் தோன்றிய பசும்பொன் மண்ணில் அவருக்கு நினைவில்லம் கட்டினார்; தேவர் சமூதாய மக்கள் பயன்பெறும் வகையில் நெல்லை மாவட்டம், மேல நீலிதநல்லூர், இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஆகிய இடங்களில் தேவர் பெருமகனாரின் திருப்பெயரில் மூன்று அரசு கலைக் கல்லூரிகள் அமைத்தார்; மதுரை ஆண்டாள்புரம் அருகே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேம்பாலத்திற்கு, “முத்துராமலிங்கத் தேவர் பாலம்” எனப் பெயர் சூட்டினார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேவர் பெருமகனார் திருப்பெயரில் மாணவச் செல்வங்களுக்கு உதவித் தொகை வழங்கிடும் வகையில் 25 இலட்சம் ரூபாய் முதலீட்டில் கல்வி அறக்கட்டளையை ஏற்படுத்தினார்.

2007ஆம் ஆண்டு முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நூற்றாண்டு விழா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு, பசும்பொன் கிராமத்தில், 10 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்ச் செலவில் தேவர் திருமகனார் வாழ்ந்த இல்லத்தைப் புதுப்பித்து.

9 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்ச் செலவில் நூற்றாண்டு விழா வளைவையும், 9 இலட்சம் ரூபாய்ச் செலவில் புகைப்படக் கண்காட்சிக் கூடத்தையும் அமைத்தார். மேலும், 3 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்ச் செலவில் அணையா விளக்கு அமைத்து, 4 இலட்சம் ரூபாய்ச் செலவில் நூலகக் கட்டடம், தேவர் ஜெயந்தியின் போது பால்குடங்கள் வைப்பதற்கு 5 இலட்சம் ரூபாய்ச் செலவில் மண்டபம், 5 இலட்சம் ரூபாய்ச் செலவில் முளைப்பாரி மண்டபம் போன்ற பல்வேறு பணிகளை தேவர் திருமகனாரின் புகழினை போற்றிடும் வகையில் மேற்கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிறப்பித்தார்.

இத்தகைய சிறப்புகளை கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்தநாள் தேவர் ஜெயந்தி விழாவாக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் அக்டோபர் 30 ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தி வருகின்றனர்.

**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் அமைக்கப்பட்டுள்ள “தெய்வீகத் திருமகனார் உ.முத்து ராமலிங்கத் தேவர் அரங்கம்” திறந்து வைத்தல்**

தேவர் ஜெயந்தி விழாவின்போது, கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாத்திட, ஒரு நிரந்தர மண்டபம் அமைத்து தர வலியுறுத்தி பொதுமக்கள் நீண்ட நாட்களாக அரசுக்கு வைத்த கோரிக்கையினை ஏற்று, **பசும்பொன் கிராமத்தில்** அமைந்துள்ள **முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தின் இரு நுழைவாயில்களிலும் ஆண்டு தோறும் தற்காலிகமாக அமைக்கப்படும் பந்தலுக்கு பதிலாக பொதுமக்கள் நலன்கருதி 1 கோடியே 55 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு மண்டபங்கள் தமிழ்நாடு அரசால் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 28.10.2023 அன்று அறிவிப்பு செய்யப்பட்டு, அதற்கான அரசாணை வெளியிடப்பட்டது.**

அதன்படி, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கதேவர் அவர்களின் நினைவிடத்தில் 1 கோடியே 55 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தினை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் திறந்து வைத்தார்.

இந்த அரங்கத்தின் மொத்த பரப்பளவு 9848.98 சதுர அடி ஆகும். இவ்வரங்கத்தில் பொதுமக்களுக்கான காத்திருப்பு கூடம் மற்றும் மிக முக்கிய பிரமுகர்களுக்கான நிரந்தர நிழற்கூரை ஆகியவையும், பொதுமக்களுக்கான காத்திருப்பு கூடத்தில் 500 ஆண்கள் மற்றும் 500 பெண்கள் தனித்தனியாக வரிசையில் செல்லும் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள வசதி, சுப நிகழ்ச்சிகள் நடத்திட மேடை வசதி, மின்விளக்கு மற்றும் மின்விசிறி வசதிகள் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் மங்கத் ராம் சர்மா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அக்டோபர் மாதம் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் காவேரி மருத்துவமனையுடன் இணைந்து சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடந்த பிங்க் ரிப்பன் வடிவத்தில் 300 மோட்டார் பந்தய வீரர்களின் ஆகிய அளவிலான மார்பக விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உறுதிமொழியை அமைச்சர் மா.சுப்ரமணியன், எம்.பிகள் தயாநிதிமாறன், தமிழச்சி தங்கபாண்டியன், காவேரி குழும மருத்துவமனைகள் நிர்வாக இயக்குனர் அரவிந்தன் கோவராஜ் ஆகியோர் ஏற்றனர். அருகில் எம்.எல்.ஏ.க்கள் அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மகேஷ்குமார் உள்ளிட்டோர் உள்ளனர்.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற

# 1279 பயனாளிகளுக்கு வழங்கிட ரூ.372.06 கோடி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒதுக்கீடு செய்து உத்தரவு!

சென்னை, அக். 29–

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து, டிசம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை ஓய்வு பெற்ற மற்றும் விருப்ப ஓய்வு பெற்ற பணியாளர்கள் என மொத்தம் 1279 பயனாளிகளுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்புத் தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையாக ரூ.372.06 கோடி வழங்கிட கருணை உள்ளத்தோடு நிதி ஒதுக்கி உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த ஏப்ரல் 2022 முதல் நவம்பர் 2022 வரை பணிபுரிந்து ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்ற மற்றும் இறந்த பணியாளர்கள் என மொத்தம் 3414 பயனாளிகளுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்களுக்காக ரூ.1031.31 கோடி வழங்கிட 29/03/2023 அன்று உத்தரவிட்டார்.

அதன்படி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த ஏப்ரல் 2022 முதல் நவம்பர் 2022 வரை பணிபுரிந்து ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் 3414 நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்களுக்காக ரூ.1031.31 கோடி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக் கழகங்களின் கடும் நிதி நெருக்கடியிலும், தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட, முதலமைச்சர் அவர்கள், கருணை உள்ளத்தோடு, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த டிசம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் விருப்ப ஓய்வு பெற்ற பணியாளர்கள் என மொத்தம் 1279 பயனாளிகளுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்புத் தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்களுக்காக ரூ.372.06 கோடி நிதி ஒதுக்கி உத்தரவிட்டுள்ளார் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அரசின் செய்திக்குறிப்பில் போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தி பெயரில் உள்ள ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை

# மோடி அரசு படுகொலை செய்ய முயற்சி!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் சாடல்!

சென்னை, அக். 29-

மகாத்மா காந்தி பெயரில் உள்ள ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தை பா.ஜ.க. மோடி அரசு படுகொலை செய்ய முயற்சிக்கிறது என ‘தீக்கதிர்’ நாளேடு புள்ளி விபரங்களுடன் சாடியுள்ளது.

அது வருமாறு:-

கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் இன்று பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளது. மோடி ஆட்சியில் வேண்டுமென்றே செய்யப்படும் அலட்சியமும், முறைகேடான நடைமுறைகளும் இத்திட்டத்தை படுகொலை செய்து வருகின்றன.



தீக்கதிர்

வேலை உறுதித் திட்டத்தை படுகொலை செய்யும் முயற்சி

வெறும் ஆறு மாதங்களில் 84.8 லட்சம் ஏழை உழைப்பாளிகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இது ஓர் எண்ணிக்கை மட்டுமல்ல; ஒவ்வொரு எண்ணுக்குப் பின்னாலும் ஒரு குடும்பத்தின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டுள்ளது. பெருந்தொற்றின் போது உயிர்நாடியாக இருந்த இத்திட்டத்தை இன்று தொழில்நுட்ப நுணுக்கங்களின் பெயரால் கொன்றொழிக்கிறது மோடி ஆட்சி.

ஆதார் அடிப்படையிலான பணப்பரிமாற்ற முறையை (ABPS) திணித்து, அதன் மூலம் தொழிலாளர்களை விரட்டியடிக்கும் தந்திரம் அரங்கேறுகிறது. கிராமப்புற வங்கிச் சேவைகள் முழுமையாக இல்லாத நிலையில், இணையதள இணைப்புகள் சரியாக இல்லாத சூழலில் இந்த டிஜிட்டல் கட்டாயம் ஏழைகளின் வயிற்றில் அடிக்கிறது.

தமிழ்நாட்டில் *14.7 சதவீ* தமும், சத்தீஸ் கரில் *14.6 சத* வீதமும் தொழிலாளர்கள் நீக்கப் பட்டுள்ளனர். லிப்டெக் நிறுவனத்தின் ஆய்வு தெரிவிப்பதைப் போல 15 சதவீத நீக்கங்கள் முற்றிலும் முறைகேடானவை. முறையான விசாரணையின்றி, தொழிலாளர்களின் குறைகளைக் கேட்காமல் மேற்கொள்ளப்படும் இந்த நீக்கம் ஜனநாயக விரோத மானது.

வேலை நாட்கள் 16.6 சதவீதம் குறைந்துள்ளன. பண வீக்கம் உச்சத்தில் இருக்கும் வேளையில், வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ள நிலையில் இந்த குறைப்பு பெரும் சமூக அவலத்தை உருவாக்கியுள்ளது. கிராமப்புற மக்கள் வேலை தேடி நகரங்களை நோக்கி புலம் பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

மோடி ஆட்சியின் கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளின் விளைவு இது. பெரு முதலாளிகளுக்கு இலட்சக் கணக்கில் கோடிகள் தள்ளுபடி செய்யும் அரசு, ஏழை மக்களின் வாழ்வாதாரத் திட்டத்தில் மட்டும் சிக்கனம் காட்டுகிறது. உழைக்கும் மக்களை வஞ்சிக்கும் இந்த அணுகுமுறை மாற வேண்டும்.

ஊரக வேலை உறுதித் திட்டத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும். வேலை நாட்களை 200 ஆக உயர்த்த வேண்டும். ஊதியத்தை உயர்த்த வேண்டும். டிஜிட்டல் கட்டாயத்தை கைவிட வேண்டும். கிராமப்புற பொருளாதாரத்தை பாதுகாக்க வேண்டுமெனில், இத்திட்டத்தை பலப்படுத்துவதே வழி. ஆனால் மோடி ஆட்சியோ இதற்கு நேர்மாறாக செயல்படுகிறது. மக்கள் நலனை காக்க, இத்தகைய மக்கள் விரோத போக்குக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது.

இவ்வாறு மோடி அரசின் நடவடிக்கையை சாடி ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அமைச்சர்கள் அர.சக்கரபாணி – தினேஷ் குண்டுராவ் சிறப்புரை!

# கருநாடக மாநில தி.மு.க சார்பில் கழக பவள விழா – முப்பெரும் விழா!

## மாநில அமைப்பாளர் ந.இராமசாமி அறிக்கை!

பெங்களூரு, அக். 29-

கர்நாடக மாநில தி.மு.க சார்பில் கழக பவள விழா - முப்பெரும் விழா சிறப்புக் கூட்டம் 10.11. 2024-ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-மணி அளவில் பெங்களூர், ராமச்சந்திரன் நகர், சாய்பாபா நகர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

விழாவில் கழக இருவண்ணக்கொடியை மாநில தி.மு.க துணை அமைப்பாளர் ஜி. இராமலிங்கம் ஏற்றுகிறார். சிறப்புக்கூட்டத்தில் இலக்கிய அணி செயலாளர் போர்.முரசு கதிரவன், விழா துவக்க உரையாற்றுகிறார். தி.மு.க இளைஞரணி துணைஅமைப்பாளர் மு. இராஜசேகர் வரவேற்புரை ஆற்றுகிறார்.

**விருதுகள் வழங்கல்!**

விழாவிற்கு கருநாடக மாநில தி.மு.க அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில் மாநில நிர்வாகிகள், பொதுக் குழு உறுப்பினர்கள், வழக்கறிஞரணி நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள், இலக்கிய அணி நிர்வாகிகள், மகளிரணி நிர்வாகிகள், தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள் முன்னிலையில் 2024-ஆம் ஆண்டுக்கான விருதுகள் பெரியார் விருதை திருமதி. வெண்ணிலா கதிரவன் அவர்களுக்கும், அண்ணா விருதை கே.எஸ்.சுந்தரேசன் அவர்களுக்கும், கலைஞர் விருதை தங்கவயல் பொன்.சாரங்கபாணி அவர்களுக்கும், பேராசிரியர் விருதை ஏ.டி.ஆனந்தராஜ் அவர்களுக்கும், மு.க.ஸ்டாலின் விருதை தங்கவயல் கு.ஆதித்தன் அவர்களுக்கும். முரசொலி மாறன் விருதை க. நாராயணசாமி அவர்களுக்கும், உதயநிதி ஸ்டாலின் விருதை இளைஞரணி துணை அமைப்பாளர் முருகானந்தம் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

விழாவில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கருநாடக மாநில சுகாதார ரத்துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் தே.மதியழகன், எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு தி.மு.க. மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மன்ற மேயர் எஸ்.ஏ.சத்யா, பொருளாளர் சந்திரபாபு, திருமதி.லேக்கா இந்திரா குமார், கிருஷ்ணகிரி மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் ஆர்.எஸ். கிரி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

கருநாடக மாநில முன்னாள் பொறுப்புக் குழு உறுப்பினர் விஸ்.மணி நன்றியுரை ஆற்றுகிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாகநிலை உறுப்பினர்கள் (BLC) 870 நபர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு புத்தாடைகள் மற்றும் பரிசு பொருட்கள் வழங்கினார். இவ்விழாவில் எஸ். ராஜசேகர், எஸ்.முரளி, கே.சந்துரு, எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், பி.ஸ்ரீராமுலு, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, இப்ராஹீம் கனி, ஆர். கலைசெல்வி, டி.போஸ், பா.ஜெகதீஷ், பி.விஜயகுமார், எம்.வினாயகம், பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், வெ.பரிமளம், ராஜேஷ்ஜெயின், எல்.நவீன், துறைமுகம் கிழக்கு பகுதி வட்ட கழகச் செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அலிமாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவிபரசு, ஆ.ந.பார்த்தியன் துறைமுகம் மேற்கு பகுதி வட்டகழக செயலாளர்கள்: எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், லண்டன்.முருகன் மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

வக்ஃப் வாரிய திருத்த மசோதா

# நாடாளுமன்ற ஆய்வுக் குழுக் கூட்டம் 2 நாட்கள் நடைபெறுகிறது!

## ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் தொடர்ந்து புகார்!

புதுடெல்லி, அக். 29-

வக்ஃப் வாரிய திருத்த மசோதா அமல்படுத்துவது தொடர்பாக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற ஆய்வுக் குழுக் கூட்டம் அக். 29, 30 ஆகிய இரு நாட்கள் நடைபெறுகிறது. அடுத்த மாதம் கூடும் நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்திற்கு முன் அறிக்கையை இறுதி செய்து மசோதாவை தாக்கல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற 18 வது ஆய்வுக் கூட்டத்தில் பஞ்சாப், அரியானா, உத்தரகண்ட் மாநில வக்ஃப் வாரியங்களின் கருத்துகள் கேட்கப்பட்டன.

ஆகஸ்ட் 22 ஆம் தேதி தொடங்கி இதுவரை 17 கூட்டங்களை இந்தக் குழு நடத்தியுள்ளது.

குழுவின் தலைவர் ஜகதாம்பிகா பால் அவசரகதியில் கூட்டத்தை நடத்திவருவதாகவும், எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை உரிய முறையில் கேட்பதில்லை என்றும் ‘இந்தியா’ கூட்டணி கட்சிகள் தொடர்ந்து புகார் தெரிவித்துள்ளன. பல முறை வெளிநடப்பு செய்து எதிர்ப்பை தெரிவித்தனர்.

இக்கூட்டங்களில் தி.மு.க. சார்பில் நாடாளுமன்ற கழக கொறடா ஆ.இராசா எம்.எம்.அப்துல்லா எம்.பி. ஆகியோர் பங்கேற்கின்றனர்.

கடந்த முறை நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் கல்யாண் பானர்ஜியின் கையில் தண்ணீர் பாட்டில் உடைந்து காயம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.